00043

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முன்பள்ளிக் கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2018/2019**
**இறுதிப் பரீட்சை – 2020**
**EPC2816/EPA2816/ESC2316- முன்பள்ளிகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளும் முகாமைத்துவமும்**

**பகுதி – I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி – II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களும் விடையளிக்குக.**

**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**

| | |
|---|---|
| திகதி: 19.07.2020 | நேரம்: மு.ப.09.30 – பி.பி. 12.30 |

## பகுதி – I

1. பொருத்தமான வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி **"முகாமைத்துவ"** எண்ணக்கருவினை விளக்குக.

2. **"இடைநிலை மதிப்பீடு"** என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

3. மாணவர்களின் மதிப்பீட்டு செயன்முறைக்கு **"அவதானிப்பு மிகவும் அவசியமானது"** மேற்குறிப்பிட்ட கூற்றை நிருபிக்க **மூன்று (3)** காரணிகளை எழுதுக.

4. முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர் செயலடைவு கோவையை பயன்படுத்துவதற்கான பயன்பாடுகள் **ஐந்தினை (5)** எழுதுக.

5. முன்பள்ளியில் வாராந்த திட்டத்தினை பராமரிப்பதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விபரிக்குக.

6. முன்பள்ளி பிள்ளைகளிற்கான கற்றல் உபகரணங்களை தயாரிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய **ஐந்து (5)** காரணிகளை குறிப்பிடுக.

7. முன்பள்ளி பதிவுகளை பராமரிப்பதன் நன்மைகள் **ஐந்தினை (5)** குறிப்பிடுக.

8. முன்பள்ளி விளையாட்டு மைதானத்தினை பராமரிக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய **ஐந்து (5)** காரணிகளை எழுதுக.

**(8 x 5 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. முன்பள்ளியொன்றில் பின்வரும் கூறுகள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை விளக்குக.

- கட்டிடங்கள்
- மேசை, கதிரை மற்றும் ஏனைய வகுப்பறை உபகரணங்கள்
- வெளிப்புற சூழல்
- விளையாட்டு மைதானம்
- சுகாதார வசதிகள்

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

10.

i. முன்பள்ளியொன்றை திறம்பட நிர்வகிப்பதில் ஆசிரிய வகிபங்கின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

ii. இலங்கை முன்பள்ளி கல்வியின் வளர்ச்சி தொடர்பாக அரசாங்கத்தின் பங்கை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11.

i. **"கணிப்பீடு"** மற்றும் **"மதிப்பீடு"** பற்றி எண்ணக்கருவை விளக்குக.

**(5 புள்ளிகள்)**

ii. **"கணிப்பீட்டு செயன்முறை மாணவர்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணியாகும்."**
மேற்குறிப்பிட்ட கருத்தை ஆதரிப்பதற்கான உண்மைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

iii. கற்றல் உபகரணங்கள் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.

**(5 புள்ளிகள்)**

12.

i. முன்பள்ளி பிள்ளைகளின் அடிப்படை தேவைகள் **நான்கினை (4)** பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. முன்பள்ளியொன்றின் வெளிப்புற நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை விமர்சனரீதியாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. முன்பள்ளி வகுப்பறை முகாமைத்துவமானது பின்வரும் பகுதியின் கீழ் பிள்ளை விருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றதென்பதை விளக்குக.

- உடல் விருத்தி
- உள விருத்தி
- மனவெழுச்சி விருத்தி
- சமூக விருத்தி
- ஒழுக்க விருத்தி

**(4 x 5 = 20 புள்ளிகள்)**